<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>

ஓ.எஸ்.எண். 390/2016 நாள்: 17.07.2018

<u>பி.டபிள்யூ.1,கே.சி. முருகேசன் மனுவில்பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்</u>

நான் தொழில் துறையின் இணைச்செயலராக பணியாற்றி பணி ஓய்வ பெற்றுள்ளேன். நான் சென்னையில் கடந்த 30 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். என்னுடைய பூர்வீகம் விஜயமங்கலம். தாவா சொத்து செம்பியநல்லூர் கிராமத்தில் உள்ளது. என்னுடைய முன்னோர்கள் வா.த..சா.ஆ.2 படி 21.01.1919 கிரையம் பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.2 ல் கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டவர்களின் வாரிசு சான்றிதழ் மற்றும் இறப்பு சான்றிதழ் வாங்கி நான் தாக்கல் செய்யவில்லை. வா.த.சா.ஆ.2 ல் கிரையம் கொடுத்தவர்கள் வா.த.சா.ஆ.1 ன் படி சொத்து பாத்தியப்பட்டதாக எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1 ன் படி சொத்தானது 25.10.1918 ல் கருமாபாளையம் கிராமம், செம்மாண்டபாளையம் கிராமத்தில் எழுந்தருளி இருக்கும் விநாயகர் சாமி, மாரியம்மன் சாமி ஆகிய இரண்டு சாமிகளுக்கு மேற்படி ஊரில் இருக்கும் 7 நபர்கள் தான செட்டில்மெண்ட் ஆக எழுதிவைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ன் படி கிரையம் கொடுத்த நபர்களுக்கு கிரையம் கொடுக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ன் படி என் முன்னோர்கள் என்று நான் சொல்பவர்களுக்கு சொத்தில் எந்தவித பாத்தியமும் உரிமையோ இல்லை என்றால் சரியல்ல.

பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

ஒப்பம்.கே.சி.முருகேசன்
*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the pleader and admitted by the witness to be correct.*
*-Sd-R.Arulmozhiselvi-*
Sub Judge,
*Avinashi.*